

கழக துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா எம்.பி., பெரம்பலூர் மாவட்டம், பீல்வாடி கிராமத்தைச் சேர்ந்த கழக பொதுக்குழு உறுப்பினர் டி.கே.இராமச்சந்திரன் இல்லம் சென்று அவரது உடல்நலம் விசாரித்தார். உடன் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், ஒன்றிய செயலாளர்கள் மா.இராஜ்குமார், வேப்பூர் தி. மதியழகன், டாக்டர் செ. வல்லபன், மருத்துவர் அணி மாவட்ட தலைவர் டாக்டர் E.T.ஜெயலட்சுமி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு கோவில்பட்டி அரசு மருத்துவ மனையில் பிறந்த குழந்தைகள் அனைவருக்கும் கோவில்பட்டி நகர தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பெ.கீதாஜீவன், கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கா.கருணாநிதி ஆகியோர் தங்க மோதிரம் அணிவித்தனர். உடன் கிழக்கு நகர கழக செயலாளர் மு.சுரேஷ், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு! விஜயின் ரசிகைக்கே பாதுகாப்பில்லை!

# பாலியல் குற்றவாளிக்குத் துணைபோகும் த.வெ.க. அரசு!

## முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் பேட்டி!

தூத்துக்குடி, ஜூன் 13 -

பாலியல் குற்றவாளிக்கு துணை போகும் தவெக அரசு என்றும் விஜயின் ரசிகைக்கே பாதுகாப்பு இல்லை என்றும் சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு, அச்சத்தில் பெண்கள் என்றும், அப்போது CM சார்.. CM சார் என கூவிவிட்டு, இப்போது மட்டும் தனிமனித ஒழுக்கம் என கூறி தப்பித்துக் கொள்ள நினைக்கிறார் முதல்வர் விஜய் என்றும் முன்னாள் அமைச்சர் திருமதி கீதா ஜீவன் செய்தியாளர்கள் சந்திப்பில் காட்டமாக கூறியுள்ளார்.



தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் திருமதி கீதா ஜீவன் அவர்கள் நேற்று முன்தினம் (11.06.2026) பத்திரிகையாளர்களை சந்தித்து தவெக ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பே இல்லாத சூழல் நிலவி வருவதையும், சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு பற்றியும் எடுத்துரைத்தார்.

அவர் பேசுகையில் " கடந்த தி.மு.க. ஆட்சியில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் முழுவதும் பெண் காவலர்கள் அடங்கிய பிங் பேட்ரோலை தொடங்கினார் முன்னாள் முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்கள். இப்போது அதற்கு ஒரு ஸ்டிக்கர் ஒட்டி சிங்கப் பெண் அதிரடிப்படை என தொடங்கி உள்ளது இந்த புதிய அரசு.

ஆடியோ லாஞ்ச் போல விளம்பரம் செய்வதில் மட்டும் குறியாக இருக்கும் இந்த அரசு நிஜத்தில் எந்த பாதுகாப்பையும் உறுதி செய்யவில்லை. ஒரு பக்கம் சிங்க பெண் படையை தொடங்கி வசனம் பேசுவது மறுபக்கம் பெண்களுக்கு எதிராக குற்றம் புரிந்தவர்களுக்கே ஆதரவாக இருப்பது.

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அருகே , முதல்வர் விஜயின் தீவிர ரசிகை ஒருவரை தூத்துக்குடி தவெக நிர்வாகிகள் பாலமுருகன், ஜெயபால் ஆகியோர் ஸ்ரீவைகுண்டம் தவெக எம்.எல்.ஏ வி.ஜி. சரவணன் மூலம், அரசு வேலை வாங்கித் தருவதாக ஏமாற்றி அழைத்துச் சென்று, கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். அது பற்றி புகார் அளித்த அந்த பெண்ணையே புகாரை வாபஸ் பெற சொல்லி கொலை மிரட்டல் விடுத்துள்ளார் த.வெ.க. எம்.எல்.ஏ சரவணன்.

அந்த அப்பாவி பெண் பத்து நாட்களாக நியாயம் வேண்டி கதறி அழுது கொண்டிருப்பது முதல்வர் விஜயின் காதுக்கு கேட்கவில்லையா..? என கேள்வி எழுப்பினார்".

மேலும் " விஜய் முதலமைச்சராவதற்கு உழைத்த ஒரு பெண் தனக்கு நேர்ந்த கொடுமைக்கு நியாயம் கிடைக்காமல் பொது வெளியில் வந்து அழுது புலம்புவதைக் கூட முதல்வர் விஜய் பொருட்படுத்தவில்லை. இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

குற்றத்துக்கு துணை போயுள்ள அந்த எம்.எல்.ஏ மீது எந்த விசாரணையும் நடத்தவில்லை. சிங்கப்பெண் திட்டத்தை புரோமோசன் செய்வதிலும் , பொய்யான தகவல்களை பரப்புவதிலுமே தீவிரமாக உள்ளதே தவிர பெண்களின் பாதுகாப்பு பற்றி எல்லாம் அக்கறையே இல்லை." என கடுமையாக சாடினார்.

**தனி மனித ஒழுக்கம் எனக் கூறி தப்பித்துக் கொள்கிறார்!**

அதோடு " தேர்தலுக்கு முன்பு எதற்கெடுத்தாலும் CM சார்.. CM சார் என கூவிவிட்டு... இப்போது மட்டும் தனிமனித ஒழுக்கம் சமூக ஒழுக்கம் என கூறி தப்பித்துக் கொள்ள நினைக்கிறாரா முதல்வர் விஜய்... நடக்கும் குற்றங்களை தடுக்க அரசுக்கு பொறுப்பு இல்லையா.?

கடந்த கழக ஆட்சியில் அப்போதைய முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்கள் பெண்களுக்கு ஆதரவாக இருந்து பெண்களுக்கு ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்து அதே போல பாதுகாப்பை உறுதி செய்தார். அதனால் தான் பெண்கள் தைரியமாக வெளியே வந்து புகார் அளிக்கும் சூழல் நிலவியது.

ஆனால் இன்று புகார் அளித்த பெண்ணையே ஒரு ஆளும் கட்சி எம்.எல்.ஏ பகிரங்கமாக மிரட்டுவதும் அப்படி மிரட்டும் எம்.எல்.ஏ மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இந்த அரசு குற்றவாளிக்கு துணையாக இருப்பதும் பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழலை உருவாக்கி உள்ளது. ஆளும்கட்சியை சேர்ந்த பெண்ணுக்கே இந்த நிலைமை என்றால் சாதாரண பெண்கள் எப்படி இனி தைரியமாக வந்து புகார் அளிப்பார்கள்.?

அதே போல " த.வெ.க. வினர் அட்ராசிட்டி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. கடைகளுக்கு சென்று மிரட்டி மாமூல் கேட்பது, பள்ளி தலைமை ஆசிரியரை மிரட்டுவது , பொது மக்களை மிரட்டுவது என அத்துமீறி நடந்து கொண்டுள்ளனர். மொத்தத்தில் இந்த புதிய ஆட்சியில் சட்ட ஒழுங்கு சந்தி சிரிக்கிறது." என கடுமையாக விமர்சித்தார்.

**ஊடகங்களை முடக்குகின்றனர்!**

மேலும் "இது அத்தனையையும் கண்டும் காணாமல் முதல்வர் விஜய் இருக்கிறார். அரசின் குறைகளை சுட்டிக்காட்டும் ஊடகங்களை முடக்குகின்றனர். ஆளும்கட்சியினர் இப்படி அதிகார அத்துமீறலில் ஈடுபட்டு பொது மக்களுக்கு எதிராக செயல்படுவதை, எதிர்த்து மக்களுக்கு ஆதரவாக கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் திமுக போராடும். எங்களின் எதிர்க்கட்சி தலைவர் சட்டமன்றத்தில் மக்களின் குரலை எதிரொலித்து நீதியை நிலைநாட்டுவார்" என்றார். இறுதியாக பேசுகையில் "இந்த அரசு சுயமாக எதையும் செய்யாமல் திமுக செய்த சாதனைகளுக்கு எல்லாம் ஸ்டிக்கர் ஒட்டி தங்களது என பொய் செய்தியை பரப்பி வருகிறது.

சமீபத்தில், முதல்வர் படம் இல்லாமல் ஸ்கூல் பேக் வழங்குவது கடந்த திமுக ஆட்சியில் இருந்து நடைபெற்று வருவது அதைக் கூட மறைத்து தற்போதைய ஆட்சி தான் செய்ததாக பொய்யைப் பரப்பி மக்களை ஏமாற்ற நினைத்தனர். இப்படி மக்களை ஏமாற்றுவதை மட்டுமே முழு நேர வேலையாக கொண்டுள்ளது இந்த அரசு" என்பதையும் குறிப்பிட்டார்.

# கோயிலுக்கு நீங்க வந்தா நாங்க ஏன் வெளியே போகணும்'!

## அமைச்சரிடம் பக்தர்கள் வாக்குவாதம்! தூய்மைப் பணியாளர்கள் முற்றுகையால் பரபரப்பு!

மதுரை, ஜூன் 13 -

மதுரை அழகர்கோவில் மலை மீது அமைந்துள்ள சோலைமலை முருகன் கோயிலில், அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் ஆய்விற்காக வந்தார். அப்போது, கோயிலில் இருந்த பக்தர்களை அதிகாரிகள் வெளியேற்றினர். இதனால், ஆத்திரமடைந்த பக்தர்கள், "சென்னை உள்ளிட்ட நீண்ட தூரத்தில் இருந்து சுவாமி தரிசனம் செய்ய வந்த எங்களை அமைச்சர் சுவாமி தரிசனம் செய்கிறார் என்பதற்காக வெளியே போகச் சொல்வது என்ன நியாயம்'' என கேள்வி எழுப்பி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால், அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர், அமைச்சர் கோயிலில் வெளிப்பகுதியில் அமைந்துள்ள தேங்காய் கடையை ஆய்வு செய்தார்.

"தேங்காய், பழங்கள் எவ்வளவு விலைக்கு விற்கிறீர்கள்'' என்றார். இதற்கு ரூ.200க்கு விற்பதாக கடைக்காரர்கள் தெரிவித்தனர். அதே நேரத்தில் கோயில் அதிகாரி ஒருவர், "100 ரூபாய்க்குத்தான் விற்கிறார்கள்'' என்றார். இதற்கு அமைச்சர், "இரு வேறு பதில்களாக இருக்கிறதே? விலைப்பட்டியலை பக்தர்களுக்கு தெரியும் வகையில் வைக்க வேண்டும்'' என்றார்.

அப்போது அமைச்சரிடம் ஒருவர், "இங்கு நடைபெறும் கடை ஏலத்தில் ஒரு தரப்பினர் மட்டுமே கலந்து கொண்டு ஏலம் எடுக்கிறார்கள். மற்றவர்கள் யாரையும் ஏலம் எடுக்க அனுமதிப்பதில்லை'' என குற்றம் சாட்டினார். அதற்கு அமைச்சர், "முறையாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றார்.

இதைத்தொடர்ந்து, 18ம் படி கருப்பணசாமி சன்னதியில் சுவாமி தரிசனம் செய்ய வந்த அமைச்சரை கோயில் தூய்மை பணியாளர்கள் முற்றுகையிட்டு, தங்களுக்கு முறையாக சம்பளம் வழங்குவதில்லை. நாளொன்றுக்கு ரூ.240 மட்டும் வழங்கப்படுகிறது.

பி.எப். பணம் பிடித்தாலும் அதற்கு முறையான தகவல் இல்லை என்றனர். இதையடுத்து அமைச்சர் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரை ரத்து செய்து, புதிய ஒப்பந்ததாரரை நியமிக்கு மாறு கூறி கிளம்பி சென்றார்.




திருப்பூர் தெற்கு மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி, கணியூர் பேரூராட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு திராவிடர் கழகத்தின் சார்பில் திராவிடர் கழக மாவட்ட தலைவர் கா.கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற பரப்புரை கூட்டத்தில் மாவட்ட கழகப் பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி சிறப்புரையாற்றினார். இதில் மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் கே.எம்.முபாரக்அலி , ஒன்றிய கழக செயலாளர் எம்.ஏ.சாகுல்அமீது உள்பட கழக நிர்வாகிகள், திராவிடர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாளைக் கொண்டாடிய

# டி.யு.சி.எஸ்., தொ.மு.ச. நிர்வாகிகளுக்கு நோட்டீஸ்!

## அமைச்சரின் பழிவாங்கும் செயலுக்கு கண்டனம்!!

சென்னை, ஜூன் 13 -

ஆண்டுதோறும் ஜூன் மாதம் 3ம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்பிறந்தநாளையொட்டி அனைத்து அரசு அலுவலக சங்கங்கள் சார்பில் ஏழைகளுக்கு உணவு வழங்கப்படுவது வழக்கம்.

அதேபோல், இந்த ஆண்டும் திருவல்லிக்கே ணியில் உள்ளநகரகூட்டுறவுசங்கத்தில் (டியுசிஎஸ்) மக்களுக்கு தி.மு.க.தொழிற்சங்கநிர்வாகிகள் அறுசுவை உணவு வழங்கினர்.

இந்நிலையில், தமிழக அரசுசார்பில், அமைச்சரின் உத்தரவின் பேரில் கூட்டுறவு இணைப்பதிவாளர் தேவிபிரியா இதுகுறித்து விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

அதில், 'டியுசிஎஸ் லிமிடெட்தி.மு.க.தொழிற்சங்க பொதுச்செயலாளர்ராஜன் சாமிநாதன் மற்றும் நிர்வாகிகள் 18 பேர், கடந்த 3ம் தேதி முன்னாள் முதல்வர் கலைஞரின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு சங்க அலுவலக நுழைவாயிலில் பட்டாசுகளை வெடித்து, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் செயல்பட்டுள்ளனர் என்றும்,

மேலும், எவ்வித அலுவலக முன் அனுமதி ஏதும் பெறாமலும்,சங்கஇணைப் பதிவாளர் அனுமதி பெறாமல்அவரின்அறையின்முன் உள்ளவரவேற்புஅறையில் உணவு விநியோகம் செய்யப்பட்டு சங்க விதிகளை மீறி உள்ளனர். எவ்வித எழுத்துபூர்வமான முன் அனுமதிபெறாமல்தன்னிச்சையாக செயல்பட்டுள்ளனர்.

எனவே அலுவலகவிதிமீறல்செயல்களுக்கானவிளக்கத்தை 3 தினங்களு க்குள் அளிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து கழகத்தலைவர் அவர்களிடம், இந்நோட்டீஸ் குறித்து திருவல்லிக்கேணி டி.யு.சி.எஸ். தொ.மு.ச. நிர்வாகி ராஜன் சுவாமிநாதன் கூறினார்.

இது குறித்து டியுசிஎஸ் தொ.மு.ச.பொதுச்செயலாளர் ராஜன் சுவாமிநாதன் கூறும்போது, 'தொழிற்சங்கங்கள் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் அந்தந்த கட்சி தலைவர்கள் பிறந்தநாளை கொண்டாடுவது வழக்கம்.

கடந்த3ம்தேதிகலைஞர் பிறந்தநாள் கொண்டாடுவது குறித்து இணைப்பதிவாளர் தேவிபிரியாவிடம் தொலைபேசி வாயிலாக அனுமதி கேட்டுவிட்டு தான் அன்னதானம் வழங்கப்பட்டது. இதுதான் ஒவ்வொரு ஆண்டும் நடைமுறையாக உள்ளது. ஆனால், தற்போதுதொ.மு.ச.நிர்வாகிகளை பழிவாங்க கூட்டுறவு துறை அமைச்சர் காந்தி ராஜ் உத்தரவின் பேரில் இணை பதிவாளர் நோட்டீஸ் வழங்கியுள்ளது கண்டிக்கத்தக்கது,' என்றார்.

### அண்ணா கிராமம் ஒன்றியம் எழுமேடு கிளைக் கழகம் சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞரின் 103 வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

## க.பொன்முடி – சி.வெ.கணேசன் சிறப்புரை! தலைமை; என். பலராமன்! வரவேற்புரை; வி.கே. வெங்கட்ராமன்!

கடலூர் ஜூன் 13 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டம் அண்ணா கிராமம் ஒன்றியம் எழுமேடு கிளைக் கழகம் சார்பில் பொதுக்கூட்டம் இன்று (13.6.2026 - சனிக்கிழமை) மாலை 5 மணி அளவில் எழுமேடு அண்ணா திடலில் நடைபெறுகிறது.

இப்போது கூட்டத்திற்கு தலைமை பொதுக்குழு உறுப்பினர் என். பலராமன் தலைமை வகிக்கிறார்

அண்ணா கிராமம் ஒன்றிய கழக செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் வி.கே.வெங்கட்ராமன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

இந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் க. பொன்முடி, கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் சி.வி. கணேசன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

என்.ராமு, எஸ். குமார், டி. சதாசிவம், கே.எம். தண்டபாணி, ஜி. சதாசிவம், கவிராஜ், கே. குமார், எஸ். கருணாகரன், கார்த்திக், திருநாவுக்கரசு, ஜெகதீசன், சம்பத், சுபாஷ், ஆதிநாராயணன், உத்திராபதி, கன்னியப்பன், என்.ராஜி, அழகிய மணவாளன், பார்த்திபன், ராமகிருஷ்ணன், ஜெயக்குமார், நந்தகோபால், பாலாஜி, பத்மினி, பலராமன், கலிய வரதன், காமேஷ், குமுதவல்லி, தண்டபாணி, புருஷோத்தமன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மேலும் மாவட்ட கழக அவைத்தலைவர் கே.நந்த கோபாலகிருஷ்ணன், நெய்வேலி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன், வி.சி.சண்முகம், கே.ராஜேந்திரன், ஆர்.எஸ். எம். தணிகை செல்வம், ஆனந்தி, சரவணன், பி.மணிவண்ணன், ஆர் ராதா கிருஷ்ணன், கே. ராமு(எ) ராமச்சந்திரன், ஆர்.சந்தோஷ் குமார், வி. ஜெயமூர்த்தி, குணா, ஆர் சுந்தர வடிவேல், ஏ.சிவா, எம்.எஸ்.கணேஷ் குமார், ஏ. மதன குரு, எஸ். துரைராஜ், சடாச்சரம் டாக்டர். விஜய் சந்திரன், கலியமூர்த்தி, எஸ். சதாசிவம், ஹைதர்அலி, கதிர்காமன், தென்னரசு, எம். எஸ்.ராம்குமார், எழில்செல்வம், ஆர்.கே.ராகவன், வி.பி. ராதாகிருஷ்ணன், கோவிலூர் ரஹ்மான், குமார், பழனிவேல், வாசுகி, அமுதா, பரணிசந்தர், சங்கர், ம.த. ஏசுதாஸ், நாராயணன், முரளி, முத்துசாமி, வா.சிவனேசன், பாலச்சந்தர், குணாளன், ராஜசேகர், ஜெ. செந்தில், டி. ஜெயமூர்த்தி, ஓ.பி. டி. தியாகராஜன், ஆறு என்ற கண்ணதாசன், எஸ் செந்தில் நாதன், டி.ஞானவேல், எஸ். இளங்கோவன், கிருஷ்ணராஜ், கருணாநிதி, வேணுகோபால், வெங்கடாஜலபதி,ஆர்.எஸ் அருள், குமரகுருதாஸ், வேல்முருகன், சித்ரா ராஜ்குமார், விஜயலட்சுமி, சாய்பிரசாத், ரவீந்திரன், வேலு, நெப்போலியன் மற்றும் மாவட்டக் கழக ஒன்றிய கழக நகர கழக பேரூர் கழக கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் தொ.மு.ச. நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பிக்கின்றனர்.

எழுமேடு எம். திருமலை நன்றியுரை ஆற்றுகிறார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தஞ்சை ந. பூபதி

**ஜூன் 13 (2006)**



தஞ்சை நகரக் கழக முன்னோடிகளில் ஒருவராக திகழ்ந்தவர்.

தஞ்சை நகரக் கழகப் பொறுப்பாளர், பொதுக்குழு உறுப்பினர், நகர்மன்றத் துணைத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

தலைவர் கலைஞர் இடும் கட்டளை எதுவானாலும் அதை அப்படியே ஏற்றுக் கொள்ளக்கூடியவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.